தஞ்சை மாவட்டத்தில் அரிசி வழங்கல்.

*284 வினா—திரு. இரெ. இராசமாணிக்கம் : திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளில் அரிசி கிடைக்காமல் ஏழைகள் கஷ்டப்படுவதும், சில பகுதிகளில் குறிப்பாக குத்தாலம் தொகுதியில் அரிசி கிலோ ரூ. 2·20 முதல் ரூ. 2·40 வரை விற்பதும் அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், நியாய விலையில் அரிசி கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டத்தில் செப்டம்பர் திங்களில் எல்லாப் பகுதிகளிலும் வெளிச்சந்தையில் அரிசி மிகத் தாராளமாக கிடைத்தது. தஞ்சை மாவட்டத்தில் நடுத்தர புழுங்கல் அரிசியின் விலை பொதுவாக கிலோ ரூ. 1·90 முதல் ரூ. 1·95 வரை இருந்தது. மாவட்டத்தில் 13 தாலுக்காகளில் 11 தாலுக்காகளில் இந்த விலைதான் இருந்தது. நாகப்பட்டிணம் தாலூக்காவில் மட்டுமே விலை கிலோ ரூ. 2·00. ஆகவும் சீர்காழி தாலூக்காவில் கிலோ ரூ. 2·20 ஆகவும் உயர்ந்திருந்தது. சம்பா அறுவடை முடிந்து அடுத்த குறுவை அறுவடை வருவதற்கு முன்பாக இடைக்காலத்தில் ஜூன் முதல் செப்டம்பர்வரை நெல் அரிசி விலையில்சிறிது உயர்வு ஏற்படுவது ஒவ்வொரு ஆண்டிலும் இயல்பான ஒரு அம்சமே. வெளிச்சந்தை விலை உயர்வைக் கட்டுப்படுத்த மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி விற்பனையை மேலும் விரிவான அளவிற்கு மேற்கொள்ளுமாறு மாவட்ட அதிகாரிகளால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் வினா எண் 285-க்கான விடையையும் படித்துவிடலாம்.

*285 Q.—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(a) whether any recommendation from East Thanjavur District Development Council for the opening of fair price shops particularly to supply rice in villages in Thanjavur district has been received; and

(b) if so, the action taken thereon?